இந்தக் களையை ஒழிப்பதற்காகக் கீழ்க்கண்ட களைக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன :—

ஹெக்சாமார் 2·4 டி.

பிளாடெக்ஸ் A (சோடியம் உப்பு).

பிளாடெக்ஸ் BC (எஸ்டர்ஸ்).

பிளாடெக்ஸ் BG (அமினி).

பெனோனேபின் 2·4 (சோடியம் உப்பு).

டபாசைடு 80.

இந்தக் களைக் கொல்லி மருந்துகள் வெளிச்சந்தையில் கிடைக்கின்றன.

இந்தக் களைக் கொல்லி மருந்துகள் பெரிதும் நச்சுத் தன்மை வாய்ந்தனவாகும். எனவே, அதனால் பாதிக்கப்படக் கூடிய அண்டை நிலங்களிலுள்ள தாவரங்களுக்கு (தானியப் பயிர்களாயிராத தாவரங்களுக்கு) அவை பரவாதவாறு பார்த்துக் கொண்டு அவற்றைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். தனித்தனி தூவுக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் 2, 4-டி மருந்தைக் கருவியிலிருந்து முழுவதும் நீக்க முடியாது. இதற்கென உழவர்களுக்குத் தேவைப்படும் தூவு கருவிகளை வேளாண்மைத் துறை வாடகைக்கு வழங்குகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் காட்டுக் கண்டங்கத்தரிக்காய் என்ற வகைகளை களை ஒழிப்பதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24-டி கலவையை மூன்று முறை அடித்தால் போய் விடும் என்று சொல்லுகிறார்கள். அப்படி அடித்தும்கூட அந்தச் செடிகள் போவதில்லை. அதிகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. மேலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மருந்துக் கலவைகள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. அது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கோவையில் இருக்கும் ரிசர்ச் சென்டருக்கு இதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கி இந்த அபாயகரமான செடிகளின் களைகளைக் களைவதற்குத் தனியாக முயற்சி எடுத்தாலொழிய எந்தப் பலனும் கிடைக்காது. அதற்கான முயற்சியை அரசு உடனடியாக எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இதற்கான முயற்சிகளை எடுத்து வந்தாலும்கூட, இதை அறவே ஒழிக்கும் முறை கடினமாக இருக்கிறது. செடிகள் மேலே மூன்று அடி வளர்ந்திருந்தால் கீழேயும்

அந்த அளவுக்குப் போய்ப் பரந்து இருக்கிறது. அந்த அளவுக்கு ஆழ மாகச் சென்றிருப்பதால்தான் இதைக் களைவது சற்றுககடினமாக இருக் கிறது. மிகக் கடுமையான மருந்துகளை அடித்தால் மறறப்பயிர்கள் நாச மாகக் கூடிய நிலை ஏற்படுவதோடு கால்நடைகள் அங்கு சஞ்சரிப்பதால் அவற்றுக்கும் தீங்கு ஏற்படும். கண்டங்கத்திரி பழங்காலமாக மருந்துக்குப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். பல மருந்துகள் தயாரித்து நடைமுறை யில் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வைத்தியத் துறையில் பயன் படுத்தியிருக்கிறார்கள். அது ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அப்படி ஆராய்ச்சி செய்து அந்த மருந்துகள் உபயோகப்படுமானால் அங்குள்ள நில உடைமையாளரிடம் அல்லது தொழிலாளர்களிடம் சொன் னால் அதைப் பறித்து வந்து விலைக்கு விற்றால் பறிக்கும் கூலியையும் கொடுக்கும் நிலை இருக்கிறது. ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எந்தெந்த முறையில் கொன்றுவிடலாம் என்பதுபற்றி நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படும்.

5 அறிவிப்புகள்.

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் 1972–73-ம் ஆண்டுக்கு, பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. கா. காளிமுத்து.
2. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
3. திரு. பி. எஸ். மணியன்.
4. திரு. பெ. சீனிவாசன்.
5. திரு. தோப்பூர் திருவேங்கடம்.
6. திரு. என். கணபதி.
7. திரு. எம். கந்தசாமி.
8. திருமதி த. ந. அனந்தநாயகி.
9. திரு. என். கே. பழனிசாமி.
10. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.
11. திரு. எம். ஏ. லத்தீப்.
12. டாக்டர் எச். வி. ஹாண்டே.

சட்டப் பேரவையின் 202-வது விதியின் கீழ் பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின்கீழ் 1972-73-ம் ஆண்டுக்கு பின்வரும் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர் களாக நியமிக்கிறேன்.—

1. திரு. மு. இராமன்.
2. திரு. எம். ஆர். கண்ணன்.
3. திரு. ந. தர்மலிங்கம்.
4. திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன்.
5. திரு. எம். பரமசிவம்.
6. திரு. அ. ப. சண்முக சுந்தரம்.
7. திரு. வி. கே. இராஜாப் பிள்ளை.
8. திரு. ஏ. பாலையா.
9. திரு. ஆ. கு. சுப்பையா.
10. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
11. திரு. ஆ. கு. பொம்மன்.
12. திரு. கே. ஏ. வகாப்.

சட்டப் பேரவையின் 215 (1)-வது விதியின்கீழ் திரு. கே. ஏ. வகாப் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்

கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி பற்றிய மதிப்பீட்டுக் குழுவின அறிக்கை

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I have pleasure to present the Report of the Committee on Estimates on Veterinary Education and Research.

(7) அரசினர் சட்ட முன்வடிவு.

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, வரித் தண்டல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் சட்ட அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, வரித்தண்டல் (திருத்த) முன்வடிவை பேரவையின்முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(8) 1971–72-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971–72-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின்மீதான பொது விவாதமும், மானியக் கோரிக்கைகளின் மீதான வாக்கெடுப்பும் நடைபெற இருக்கிறது. இப்போது மணி 10–35. சரியாக ஒரு மணிக்கு விவாதம் முடிவுற்று 1 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறவேண்டும். ஒரு மணிக்குள் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் அளித்து முடிக்க வேண்டும். பல உறுப்பினர்கள், 15 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இரண்டரை மணி நேரம்தான் இருக்கிறது. துணை நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்கள் பற்றி மட்டும்தான் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசுவதுபோல் அத்தனைக் காரியங்களைப் பற்றியும் கொள்கை பற்றியும் பேசுவது முறையாகாது. சில பேர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருப்பதை, சிலர் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அரை மணி நேரமாவது பதில் அளிக்க வேண்டியிருக்கும். 1 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறவேண்டியிருப்பதால் சுருக்கமாக முடித்துக்கொள்ளவேண்டும். சிலபேர்கள் விடுபட வேண்டி வரலாம். துணை மானியக் கோரிக்கைகள் பற்றி மட்டும் பேசுவது என்பதுதான் விதிமுறைகளுக்கு உட்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதி அறிக்கையில் வேளாண்மை என்ற தலைப்பில் 107 லட்சம் ரூபாய் அதிகமாகக் கோரப்பட்டிருக்கிறது. அதில் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டத்திற்கு ரூ. 46 லட்சம் ரூபாய் வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டு பாடுபடும் விவசாயிகள் சமீபத்தில் தமிழ்நாடு பூராவும், குறிப்பாக கோவில்பட்டி வட்டாரத்தில் மிகவும் நெருக்கடியான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். நாலைந்து ஆண்டுகளாக அங்கு பருவ மழை அதிகமாக இல்லாததன் காரணமாக அவர்களுக்கு வரவேண்டிய வருமானம் சரியாக வராததால் ஏகப்பட்ட நஷ்டத்திற்கு அங்குள்ள விவசாய மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். பழைய பாக்கிகள்

முற் 10-